DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW-15 (L.W.18 )** |
| **Name** | **:** | ரவீந்திரன் |
| **Father's Name** | **:** | பெரியண்ணன் |
| **Age** | **:** | **52** |
| **Address** | **:** | கோயமுத்தூர் |
| **Village** | **:** | கோயமுத்தூர் |
| **Calling** | **:** | காவல் ஆய்வாளர் (ஓய்வு ) |

**Witness appeared through Video Conference and Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**31.07.2026**

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது கோயமுத்தூரில் வசிக்கிறேன். நான் தமிழக காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஊட்டி பி–1 நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது லவ்டேல் காவல் நிலைய குற்ற எண் 343/2017 வழக்கில் முதல் விசாரணையை காவல் ஆய்வாளர் பாஸ்கரன் என்பவர் மேற்கொண்டிருந்ததில் புலன் விசாரணைக்காக மேற்படி கோப்பினை பெற்று 30.10.2017 அன்று சாட்சிகள் பிரித்விராஜ், டேவிட், பாஸ்கரன் ஆகியோர்களை

விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 03.11.2017 அன்று சாட்சிகள் சிங்கராஜன், பூவலதா, பால்துரை ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு உதவி இயக்குநர், Prosecution அவர்களின் கருத்துரை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச. பிரிவு 307, 34 மற்றும் பிரிவு 3(1)TNPPDL Act கீழ் மாற்றம் செய்து 03.11.2017 அன்று நீதிமன்றத்திற்கு அறிக்கை தாக்கல் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ–21**. பிறகு அன்றே புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

சம்பவ இடத்தின் உரிமையாளர் யார் என்பதை தெரிவிக்கும் ஆவணம் எதையும் கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக கூறும் வீடு 1ஆம் எதிரிக்கு சொந்தமான வீடு என்றும், அதில் 1ஆம் எதிரிதான் குடியிருந்து வந்தார் என்றும் சொன்னால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்லமுடியும். நான் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் முறையாக மேல் விசாரணை செய்யவில்லை என்றும், எதிரிகள்மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் தவறு. நான் கூறுவது போல்

**சாட்சிகள் எவரையும் விசாரிக்கவும் இல்லை என்றால் தவறு.**

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.08.05 15:28:07 +0530